

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி ஆத்தூர் தொகுதி பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்று உடனடி தீர்வு கண்டார். மேலும் ஊரக வளர்ச்சித்துறை தொழிலாளர்கள் சங்கம் சார்பாக ஜனவரி 7ம் தேதி திண்டுக்கல்லில் நடைபெறும் மாநில மாநாட்டில் அமைச்சர் ஐ.பெரியசாமி கலந்துகொள்ள மாநில நிர்வாகிகள் அழைப்பு விடுத்தனர்.உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



அமீரக திமுக அமைப்பாளர் எஸ்.எஸ். மீரான் ஏற்பாட்டில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு கருத்தரங்க விழா கடந்த திங்களன்று (6.11.2023) நிகழ்ச்சி துபாய் தேரா பகுதியில் அமைந்துள்ள லேண்ட்மார்க் கிராண்ட் ஹோட்டலில் நடைப்பெற்றது. இதில் கழக மாநிலங்களவை குழுத் தலைவர் திருச்சி சிவா சிறப்புரையாற்றினார். உடன் எம்.எம்.அப்துல்லாஹ் எம்.பி. – எஸ்.எஸ். மீரான் உள்ளிட்ட முன்னணியினர் பங்கேற்றனர்.

# துபாயில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா கருத்தரங்கம்!

## திருச்சி சிவா சிறப்புரை! எம்.எம்.அப்துல்லா எம்.பி. - எஸ்.எஸ். மீரான் பங்கேற்பு!

துபாய், நவ. 10-

அமீரக திமுக அமைப்பாளர் எஸ்.எஸ். மீரான் ஏற்பாட்டில், முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு கருத்தரங்க விழா கடந்த திங்களன்று (6.11.2023) நிகழ்ச்சி துபாய் தேரா பகுதியில் அமைந்துள்ள லேண்ட் மார்க் கிராண்ட் ஹோட்டலில் இரவு 7 மணியளவில் நடைப்பெற்றது.

அமீரக திமுக பொறுப்பாளரும், வெளிநாடு வாழ் தமிழர் நலவாரிய உறுப்பினருமான எஸ்.எஸ்.மீரான் தலைமையில் நடைப்பெற்ற இந்த நிகழ்வை ஆசிஃப் மீரான் தொகுத்து வழங்கினார்..

இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர்களாக திமுக கொள்கைபரப்புச செயாலாளாரும் மாநிலங்களவைக் குழுத் தலைவருமான திருச்சி சிவா எம்.பி., அயலக அணி செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான எம்.எம். அப்துல்லா, தலைமை செயற்குழு உறுப்பினர் கீரை தமிழ் ராஜா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்கு புகழஞ்சலி செலுத்தும் வகையில் அவரின் திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் பேசிய மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லாஹ் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சாதனைகளையும், அவரது இலக்கிய படைப்புகள் குறித்தும் நினைவு கூர்ந்தார்.

கலைஞர் கொண்டு வந்த இலவசத் திட்டங்கள், மகளிர் கல்வி உதவித்தொகைத் திட்டங்கள் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தியது குறித்தும், அரசு வருவாய் மேம்பட வழி வகுத்தது குறித்தும் விளக்கமாகப் பேசினார்.

தொடர்ந்து பேசியவர், நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த அமீரக திமுக பொறுப்பாளரும், வெளிநாடு வாழ் தமிழர் நல வாரிய குழு உறுப்பினருமான எஸ்.எஸ்.மீரான் அவர்களை வெகுவாகப் பாராட்டினார். கலைஞரின் ஜனநாயக அணுகுமுறை குறித்து உதாரணங்களைக் கூறினார்.

மேலும் அயலக அணியின் அவசியம் குறித்தும், செயல்பாடுகள் குறித்தும் எடுத்துரைத்தார்.

அதனை தொடர்ந்து பேசிய திமுக மாநிலங்களவைக் குழுத் தலைவர் திருச்சி சிவா அவர்கள் “ஐக்கிய அமீரகத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருந்தாலும் கழக உடன்பிறப்புகளான உங்களையெல்லாம் சந்திப்பது மனநிறைவைத் தருகிறது” என்றார்.

மேலும் முத்தமிழ் கலைஞர் அவர்களுக்கும் தனக்கும் இருந்த உறவையும், தன்னுடைய வளர்ச்சிக்கு இளம் வயதிலிருந்தே பெரும் ஆதரவாக இருந்த அவரது பழைய நினைவுகளை நினைவு கூர்ந்தார். கழகம் இக்கட்டான சூழலில் இருந்த போதெல்லாம் அண்ணா வழியில் இந்த கழகத்தை கட்டுக்கோப்பாக வைத்திருந்ததால்தான் தலைவர் கலைஞர் அவர்கள் அனைவரின் மனதிலும் நிலைத்து நிற்கிறார்.

உலகெங்கும் வாழக் கூடிய தமிழர்கள் அனைவரும் இன்னும் நூறாண்டு காலம் தலைவர் கலைஞர் அவர்களை நினைத்து வைத்திருப்பார்கள் என்று தனது உரையில் குறிப்பிட்டு பேசினார்.

தந்தை பெரியாரின் கையில் இருக்கும் தடி இன்னமும் பலருக்கு கிலியை ஏற்படுத்துகிறது என்றார். மேலும், ஆசிஃப் மீரானின் நேர்த்தியான நிகழ்ச்சித் தொகுப்பு குறித்து பாராட்டினார்.

முன்னதாக வாழ்த்துரை வழங்குவதற்காக ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் துணை முதல்வர் பேராசிரியர் மன்சூர், ஹுசைன் நெல்லை கிழக்கு மாவட்ட தலைவர் எல்.கே.எஸ். மீரான், ஊடகவியாளர் முதுவை ஹிதயாத்துல்லா, ஆர்.ஜே சாரா, தமுமுக அப்துல் ஹாதி, கவிஞர் சசிகுமார், நஜ்முதீன், பிலால் அலியார், மதிமுக பாலா, கவிஞர் மரியம் கபீர், , அய்மான் சங்க நிர்வாகிகள் அதிரை சாகுல் ஹமீது, அப்துல் காதர், முத்தமிழ் சங்க ஷா, ஈமான் ஜாகிர் காயிதே மில்லத் பேரவை ஹமீத் ரஹ்மான், பிரசன்னா, முஸ்லிம் லீக் பரக்கத் அலி, காமில், தமிழ் செல்வன், அமீரகத் தமிழ் சங்கம் சிலு, சோசியல் ஓர்கர் ரீலேகா, டயானா, ரெஙகராஜன், EMAAR இயக்குனர் ஆனந்த், மேலாளர் முபாரக், ஜெஸீலா பானு,

ஆர்.ஜே அஞ்சனா, தமுமுக அப்துல் ஹாதி, இப்ராஹிம், செல்வி சானியா, திருச்சி கோல்ட் ஹபீபுல்லாஹ் மற்றும் பல்வேறு பிரமுகர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

நிகழ்ச்சியில் அமீரக திமுக நிர்வாகிகள் எம்.எம். முஸ்தஃபா, பிளாக் துலிப் செந்தில், அன்பு, அபுதாபி ஜாகிர் ஹுசைன், இளமுருகன், வி.எம்.பிரபு, இர்ஷாத், பருத்தி இக்பால், இஞ்சினியர்பாலா, கபீர்,, பாண்டியன், தாரிக், கடையநல்லூர் உதுமான், அமீன், உதயநிதி ரசிகர் மன்ற இணை செயலாளர் வி.கே. புரம் பாலா, தாவுத், பாவை பாஹீம், மேலாப்பாளையம் ஃபரீத், ஜெகபர் அலி, மற்றும் ஏராளமான அமீரகம் வாழ் கழக உடன் பிறப்புகள் கலந்து கொண்டனர்.

# சென்னையில் நேற்று இரவு கனமழை!

சென்னை, நவ. 10-

சென்னை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் காற்றுடன் கூடிய கனமழை பெய்து வருகிறது. இதனால், சாலைகளில் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது.

சென்னை சென்ட்ரல், மீனம்பாக்கம், கிண்டி, சைதாப்பேட்டை, எழும்பூர், ஈக்காட்டுத்தாங்க, அசோக் நகர், கே.கே.நகர், வளசரவாக்கம், போரூ, அமைந்தகரை, அண்ணாநகர், முகப்பேர் உள்ளிட்ட பகுதிகளில் கனமழை பெய்தது.

இதேபோன்று சென்னை புறநகர்ப் பகுதிகளான அம்பத்தூர், ஆவடி, திருமுல்லைவாயல், பூவிந்த வல்லி, வண்டலூர், தாம்பரம், பல்லாவரம் உள்ளிட்ட பகுதிகளில் காற்றுடன் கூடிய கனமழை பெய்தது.

மத்தியகிழக்கு அரபிக் கடல் பகுதிகளில் உருவான காற்றழுத்த தாழ்வுப் பகுதி அதே பகுதியில் நிலவுவதால், கிழக்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக தென் மாவட்டங்களில் கனமழை முதல் மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது.

சென்னையில், அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும் நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்யக்கூடும் எனவும் குறிப்பிட்டிருந்தது.

## வைகை அணையிலிருந்து

# 900 கன அடி தண்ணீர் திறப்பு!

## நீர்வளத்துறை உத்தரவு!

சென்னை, நவ.10-

பெரியாறு பிரதான கால்வாய் பாசன பகுதியின் கீழ் உள்ள இருபோக பாசன பகுதியில் முதல் போக பாசன பரப்பில் உள்ள நிலங்களில் விவசாயம் செய்வதற்கு 10.11.2023 முதல் நாள் ஒன்றுக்கு 900 கனஅடி வீதம் 45 நாட்களுக்கு முழுமையாகவும் 75 நாட்களுக்கு முறை வைத்தும் மொத்தம் 120 நாட்களுக்கு தண்ணீரின் இருப்பு மற்றும் எதிர்ப்பார்க்கப்படும் நீர்வரத்தினை பொறுத்து தேவைக்கேற்ப வைகை அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட அரசு ஆணையிட்டுள்ளது.

இதன் மூலம் மதுரை மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள 45,041 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்று நீர்வளத்துறை தெரிவித்துள்ளது.


